Registered No. M. 408.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு.

திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

THE THIRUNAVUKARASU.

PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௧] திருநெல்வேலி: விசுவாவசுஹு மாசிமீ ௩-உ; 1906-ம்ஹு பிப்பிரவரிமீ 15-உ [இலக்கம் ௧

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லா, மருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே, பொருந்துதண் புறவினிற் கொன்றை பொன் சொரிதரத் துன்றுபைம்பூஞ், செருந்தி செம்பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே."

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி, மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தெ னுளமே புகுந்த வதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே, ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

கடிதக்காரர்களின் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

இயன்றவா வெண்ணி யியல்புணர்ந்தோ ரென்று
முயன்றவா நாமு முயன்றாற்—பயன்றவா
தன்புறலா மெங்கள் அரசின் றிருவடிக்கீ
ழின்புறலா நெஞ்சே யெழு.

—— அப்பூதி.

அப்பா வரசே யருமைக் குழந்தாய்நீ
யெப்போது மெய்க்கே யிருத்தியா—லெப்போது
மெய்யே நினைத்தியான் மெய்யே யுரைத்தியான்
மெய்யே விளக்குதியால் வேறு.

—— இதோபதேசி.

கண்ணிற் படலம் உடையவர்களும் உண்டு; அவர்களால் ஒன்றுங் காணமுடியவில்லை; அவர்கட்குக் காட்டுபவர்களும் இல்லை. காமாலைக்கண்ணர்களும் உண்டு; அவர்கட்கு உள்ளது உள்ளபடியே தெரிவதில்லை, வேறொன்றாகத் தெரிகின்றது. இவ்விருவர்கட்கும் வயித்தியர்கள் உண்டு.

***

கண் ஒளியுடையதாயினும் அது, தான் காண்பதற்கு வேறோ ரொளியை வேண்டுகின்றது; ஆனால், அவ்வொளியைத் தன் தகுதிக் கேற்பவே கொள்கின்றது; அதிகமாய்க்கொண்டால், உள்ள ஒளியையும் இழந்துவிடுகின்றது; அதனால் அது, தன் தகுதிக்கு மிஞ்சிய ஒளியைக் கண்டால், உடனே ஒளிக்கத்தொடங்குகின்றது; தன் தகுதிக்குக் குறைந்த ஒளியிலே அது, திருப்தி அடைவதில்லை.

***

சிலர், (சிறிது) தூரத்தே இருக்கும் பொருளையே காண்கின்றனர்; சிலர் (சிறிது) தூரத்தே இருக்கும் பொருளையும், மிகச் சமீபத்திற்கு இழுத்து வைத்து, உற்று நோக்குகின்றனர். இவ்விருவர்க்கும், நடுவு நிலையில் நோக்குதற்குக் கண்ணாடிகள் இருக்கின்றன; அவற்றை, அவருடைய கண்களின் இயல்புணர்ந்து, அவர்க்குத் தருபவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், அவை ஒருவர்க்குதவுவது மற்றவர்க் குதவாதொழிகின்றன.

***

நல்ல கண்ணுக்கும், மிகச்சமீபித்த அதி நுட்பமான பொருளும், மிகத்தூரத்தே உள்ள பெரியபொருளும் தெரியாதொழிகின்றன; அவற்றைக் காட்டுதற்கும் கண்ணாடிகள் இருக்கின்றன. அவற்றையும் உபயோகிக்கத் தெரிந்தவர்களே உபயோகித்துப் பயன்பெறுகின்றார்கள்.

***

எப்படியும் கண்களே காண்கின்றன; அநேகமாய் எல்லாருக்கும் கண்கள் இருக்கின்றன; எல்லாரும் தத்தம் கண்களையே நம்பியிருக்கின்றார்கள்; பொருள்களைக் கட்புலப்படுத்தும் கருவியும ஒன்றல்ல. கண்ணிருந்துங் காணாதவர் பலர். மின்னொளியிலும், கண்ணொளியைப் பறிகொடாது பாதுகாத்து, அதிநுண்பொருளையும் கண்டெடுப்பாரும் உளர்.

***

கண் காணும், காது கேட்கும்; இவற்றுள் ஒன்றை ஒன்று அறியாது. ஆயினும், இவ்விரண்டையும் அறிக்

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலியுட்பட முற்பணமாக ஒருவருஷத்திற்கு ரூ. 1, மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ. 2, தனிப்பிரதி 1-க்கு அணா 2.

து, இவ்விரண்டாலும் அறிவது ஒன்றுண்டு; அதனை இவ்விரண்டும் அறியமாட்டாவாம்.

***

“கண்ணாரக் கண்டதும் பொய்; காதாரக் கேட்டதும் பொய்; தீரவிசாரித்ததே மெய்.” என்னும் இவ் வசனத்தை அநேகர் கேட்டிருக்கலாம். இதன் கருத்தென்ன?

***

உள்ளதை உள்ளபடியே உணர்தலினும் மிகமேலாயதோருணர்ச்சியும் இல்லை; அவ்வாறு உணர்தலால் ஆகிய இன்பத்தினும் மிகமேலாயதோரின்பமும் இல்லைபோலும்! இதனை உணராமலா, உண்மை உணர்ந்தோர் மீட்டும் மீட்டும், உண்மை உணர்தற்கே ஓயாமல் உழைக்கின்றார்கள்? ஐயையோ, யானும் என்போலிகளும் குறட்டை விட்டுக் கொடுவா யோடத் தூங்குகின்றோமே! இது என்ன அநியாயம்!

***

சிலர், “அறிவு சோறிடுமோ?” என்கின்றார்கள்; அவர்க்குச் சோறிடுவது அறியாமை போலும்!

***

ஒரு பொருளைக் காதலிப்பவன் அறிகின்றான், அறிந்தவன் பெறுகின்றான்.

***

காதல் அறிவைத் தருகின்றது; அறிவ ஆற்றலைத் தருகின்றது; ஆற்றலும் அறிவும் காதலால் விளைதல் கண்கூடன்றோ?

***

ஒன்றை விரும்பினால், அதன் குற்றந் தெரியாதொழிகின்றது; வெறுத்தாற் குணந்தெரியாதொழிகின்றது. ஆதலின், விரும்புதல் வெறுத்தல் என்னும் இவ்விரண்டுமின்றி ஒன்றை ஆராய்தலே, உண்மை உணர்ச்சிக் கேதுவாம். இங்ஙனமாகவும், குற்றமே என வெளிப்படத் தெரிந்த ஒன்றை அபிமானத்தாற் குணமெனக் கூறுவதும், குணமே என விளங்க உணர்ந்துகொண்ட ஒன்றை வெறுத்துக் குற்றங் கூறுவதும் எவ்வளவு அறியாமை!!

***

அறிவின்றி ஒன்றும் செய்யமுடியவில்லை; அறிவு தடுமாறுதலும் செய்கின்றது; அது எப்பொழுதும் சரியாய் அறியுமென்று நம்பமுடியவில்லை; அறிவை நம்பாவிட்டால் வேறு எதை நம்புவதென்று தெரியவும் இல்லை; வேறு எதை நம்பினாலும், அவ்வறிவுகொண்டே நம்பப்படுகின்றது. ஆதலின், அறிவு குறையுடையதாயினும் அதனைத்தான், மீட்டு மீட்டும் நம்பிக்கிடக்க வேண்டும் போலும். அந்தோ!

***

தன்னை நம்பாதவன் வேறு எதனைத்தான் நம்புவான்? தன்னை நம்பாமலே வேறொன்றை நம்புகின்றான் என்றால், அங்ஙனம் தன்னைவிட்டு வேறொன்றை நம்பும்படி செய்தது எது? அவ் வேறொன்றோ; தானோ? அவ் வேறொன்றாயினும், நம்பினது தானன்றோ? தன்னை நம்பாதவன், தான் நம்பினது சரியென்று எப்படி நம்புகின்றான்? அது, தன்னை நம்பினதேயன்றோ?

***

அறியாமையால் துன்பம் நேருமாயின், அதனை அறிந்தது அறிவேயாம். அவ் வறிவே அத்துன்பத்தைத் தீர்க்கும்வழி அறிந்து தீர்த்துக்கொள்வதல்லது அவ் வறியாமையாற் றீர்க்கமுடியாது.

***

சிலர் செல்வத்தாற் செருக்குகின்றனர்; சிலர் கல்வியினாற் செருக்குகின்றனர்; சிலர் அறிவினாற்செருக்குகின்றனர்; சிலர் ஒழுக்கத்தினாற் செருக்குகின்றனர். சிலர் இவற்றுட்சிலவும் பலவும்பற்றிச் செருக்குகின்றனர். இவரெல்லாம் இவ்வாறாகச் சிலர், “செருக்கு அறியாமையால் உண்டாம்; அதனாற் கேடுண்டு” என்கின்றனர். அறிவிலாரிடத்தும் செல்வம் இருத்தலின், செல்வச்செருக்கு அறியாமையால் உண்டாம் என்றல் ஒருவகையால் ஒக்குமாயினும், அறிவுத்தொழிலே கல்வியும், கல்வியின் பயனே அறிவும், அவ்விரண்டன் பயனே ஒழுக்கமும் ஆதலால், அம்மூன்றனுள் ஒன்றும் பலவும் உடையோர் செருக்குங்கால் அது, அறியாமையால் வந்தது என்றல் எவ்வாறு பொருந்தும்? அவர் செருக்கினாற் குற்றம் என்னை?— கற்றவற்றை நோக்கக் கல்லாதன மிகுதலானும், அறிந்தவற்றை நோக்க அறியாதனவே அதிகரித்தலானும், கற்றலொன்றேயுடையாரும், அறிவொன்றேயுடையாரும், அவ்விரண்டுமேயுடையாரும் தமது கல்வி அறிவுகளே அமையும் என்றெண்ணி அமையாராகலானும், அமையினும் அவர், அவற்றின்மேல் “ஒழுக்கம்” என ஒன்றுளதாதலை உணர்ந்து, அது தம்மிடத் தின்மை நோக்கி அடங்குவர் ஆகலானும், மேலும் தாம் கற்றதும், அறிந்ததும், தம்பொருட்டாயினும், அதனோடு பிறர்பொருட்டாயினும் அவற்றைத் தமக் கின்பந்தருவனவாகத்தான், அன்றித் தமது கடமையாகத்தான் கருதுவதல்லது அவை பற்றிச் செருக்குதற் காரணம் இன்மையானும், செருக்குதல் கல்வி அறிவு ஒழுக்கங்களின் வளர்ச்சிக்குத் தடையாம் ஆகலானும், ‘செருக்கு அறியாமையால் உண்டாம்’ என்றலும், ‘அதனாற் கேடுண்டு’ என்றலும் பொருந்தும் போலும்.

***

ஒருவன் தன்னிலைமையை, அதன் முன்னை நிலைமையோடு ஒப்புநோக்கி, இறுமாத்தற்குக் காரணமுண்டாயின், அங்ஙனம் இறுமாத்தலாற் குற்றமுண்டோ?

***

தம்மினும் மிகுந்த அறிவுடையோரைக் குறைந்த அறிவுடையோர் கண்டு பொறாமைப்படுகின்றனர். இங்கே பொறாமை, நன்மையும் தரலாம், தீமையும் தரலாம்; எப்படி?—பொறாமைப்படுபவர் தம்மினும் மிகுந்த அறிவுடையோரைப் போலத் தாமும் ஆதல் வேண்டும் என்று விரும்பினால் நன்மை தருகின்றது; தாமும் அவ்வாறு அறிவுடையோர் ஆதல் வேண்டும் என்று ஆசைப்படும்பொழுது உண்டாகும் பொறாமை தம்முடைய குறைவு கண்டு பொறாமையே தவிர, அவ் வறிவுடையோரது ஆக்கங்கண்டு பொறாமை அன்று; இப் பொறாமை, தன்னை உடையார்க்கு உள்ள குறைவை நீக்கி நன்மை பயத்தலின் நன்றே ஆகின்றது; இது உயர்ந்தோரால் விலக்கப்பட்ட பொறாமை அன்று; அது பிறர் ஆக்கங் கண்டு பொறாயே ஆம்.

***

அறிஞர் சிலர் உண்மைகளை அறிந்துகொள்ளுதல்

என்னும் அவ்வொன்றுமே பற்றி அறிகின்றார்கள்: சிலர் அவற்றைப் புகழ்வேண்டியும் பொருள் வேண்டியும் அறிகின்றார்கள்; இவர்களில் யார் அதிகமான பயனைப் பெறுவர்?

* * *

தாம் சொல்வது இன்னதென்று தமக்குத் தெரியாமலே சொல்பவர்களும் உண்டு. தாம் கேட்பது இன்னதென்று தமக்குத்தெரியாமலே கேட்பவர்களும் உண்டு. பிறர்தலையசைப்பதைப் பார்த்தே தாம் தலையசைப்பவர்களும் உண்டு. இவர்களையெல்லாம் இவ்வாறு செய்யவிட்டு வேடிக்கை பார்ப்பவர்களும் உண்டு. இவர்களுடைய காலம் எப்படிக் கழிகின்றதென்பது இவர்கட்குத் தெரியாது.

* * *

"தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த நன்மனைக்கிழத்தி" யின் பெருமை, "எள்ளுக்கெண்ணெய் போலத் தள்ளாது, பொருளினளவைகருப் போகம் விற்றுண்ணும் அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்" தவற்கும் தெரிந்திடாமை மிகவும் வியப்பைத் தருகின்றது!

* * *

இருவேறு யாறுகள் தம்மிற் கலக்கின்றன; கலந்த பின், அந்த இரண்டு யாறுகளும் ஒரே யாறாய் ஒழுகக்காண்கின்றோம். இது காண்டற்கு மிக இனிதாயிருக்கின்றது, சில யாறுகள், தம்மிற் கலந்த பின்னும், சிறிது தூரம் வெவ்வேறாய், நிறந்தெரிந் தொழுகக் காண்கின்றோம். இதற்குக் காரணம், அவற்றில் யாதானும் ஒன்று, கலங்கலாய் இருப்பதேபோலும்!

* * *

நம்முடைய நாட்டிலே பெரும்பாலும், மாமி மருமகள் வாழ்க்கை, அறிவுடையோர் கண்டு வெட்கப்படத்தக்கதாய் இருக்கின்றது! இதற்குப் பரிகாரம் இல்லையா?

* * *

ஒருவன், நன்மனைக் கிழத்தியை நீத்தும், பொதுச்சேரி புகுகின்றான். புகுந்தாற்கு, ஆண்டும் அவன் அறியாமலும் பிள்ளைகள் பிறக்கலாம். அவரைப் பாதுகாக்கும் கடமை அவற்கில்லையா?

* * *

ஒருவன், வெளியே திரிந்து, வீட்டையுங் கெடுக்கின்றான். இவன்றானே இரண்டுங்கெட்டவன்?

* * *

ஒருவன், தன், மனைவிக்கு அழகில்லை என்று, வேறு கலியாணஞ் செய்கின்றான். இவனுக்கு இதுதான் அழகுபோலும்!

* * *

ஒருவன், வயோதிகத்திலும் இளம்பெண்ணை விவாகஞ் செய்கின்றான். இவனுக்கு, ஒருத்தி வயோதிகத்திலே இளைஞனை விவாகஞ்செய்தால், எப்படித் தோற்றும்?

* * *

ஒருவன், தனக்குத் தன்மனைவியிடத்திலே சிறிது வெறுப்பு வந்த உடனே, வேறு கலியாணஞ் செய்துகொள்ள விரும்புகின்றான். அவளும அப்படியானால், இவன் என்ன நினைப்பான்?

* * *

ஒருவன், பிள்ளைப்பேற்றின் பொருட்டுப் பலபெண்களை விவாகஞ்செய்கின்றான்; செய்தும் பயனில்லாமற் போவதும் உண்டு; அப்பொழுது, இவனுக்குப் பெண்மக்கள் பலரும், அப்பெண்மக்கட்கு ஆண்மகன் ஒருவனும் உளர்.

* * *

"இரண்டு பெண்டாட்டிக்காரனுக்குக் கொண்டையென்னடா கொண்டை?" என்று ஜனங்கள் 'கொண்டை' பண்ணுவதை அநேகர் கேட்டிருக்கலாம். இதன் கருத்தென்ன?

* * *

ஒருவன், தன் மனையைத் தனியே இருத்தி, வேற்றோர் மனையின் தோற்றம் புகழ்ந்து, அவர் புறக்கடைநின்று அயர்ந்து, பிழைவழி பாராது நுழைவழி நோக்குகின்றான். பிரமன் இவனைப் படைத்து, நாயை என் படைத்தான்?

* * *

கூடா ஒழுக்கம், குடி முதலியவற்றைப் பிரபுத்துவம் எனக் கொண்டொழுகுவாரும் உளர். இதுவும் ஒரு வெட்கக்கேடு!

* * *

கூடா ஒழுக்கமுடைய சில செல்வர்கள் அல்லது அதிகாரிகள் காதிற்கு, அவர்களைப்பற்றிக் கொசு கொசு என்று ஜனங்கள் பேசிக்கொள்வது ஏறவில்லை போலும்!

* * *

"காமத்திற்குக் கண்ணில்லை." என்பர்; கண்ணுக்கேன் காமம் இருக்கின்றது?

* * *

குடியர்களும் கூடாவொழுக்கம் உடையவர்களும் அதிகரித்தற்குக் காரணம் பலர் பலவாறு கூறுவர். ஆயினும் அவற்றுள், ஒன்று தான் மிக முக்கியமாகத் தோற்றுகின்றது; அது பிறர், அவரையும் ஒரு பொருளாக மதித்தொழுகுவதேயாம்.

* * *

கூடாவொழுக்கம் உடையவர்களை, அவர் மனைவிமாரும் மதியார்; இதனை அவர் அறிந்து கொள்ளுதல் நல்லது.

* * *

சிலர், பிள்ளைகளைப் பெற்றபின்னுவது, தமது ஒழுக்கங்களைச் சீர்திருத்திக்கொள்கின்றார்களில்லை; அவர்கட்குத் தம் மக்களிடத்தே இரக்கமில்லை போலும்!

* * *

"தையல் சொற் கேளேல்" என்றது தலையணை மந்திரத்தை யன்றோ?

* * *

தன் பிதாமுதலிய சுற்றத்தாரையெல்லாம் துறந்து, "கொண்டானிற்றுன்னியகேளிர் பிறர் இல்லை" என்று தன்னையே முழுவதும் நம்பித், தன் இல்லம் புக்க தன் மனைவிக்கும் கொடுமை செய்வோன் வீரனும்; இது வியப்பன்றோ?

* * *

மகனை விரும்புவானும்; மகனைப்பெற்றுக்கொடுத்த மனைவியை வெறுப்பானும்.—இதென்ன?

* * *

மகளை விரும்புவாள், மருமகளை வெறுப்பாள்; மருமகனை விரும்புவாள், மகனை வெறுப்பாள்.—இவள் அம்மையா, அத்தையா?

* * *

"அப்பன் நீ, அம்மை நீ, அன்புடைய மாமனும் நீ, மாமியும் நீ." என்பது தமிழ்வேதம். இதில், மாமனையும் மாமியையும் "அன்புடைய" என விசேடித்தது என்?

* * *

தன் மனைவி அல்லது மனைவியின் பந்துக்கள், தன் பெற்றோரை நிந்திக்கவும் துன்புறுத்தவும் விட்டுப் பார்த்திருப்பவனை நன்றியறிதலுடையன் என்போமா; பொறையுடையன் என்போமா?!!

***

இந்நாட்டுப் பெண்களிற் சிலர், தண்ணீர் மொண்டு கொண்டுவரப்போய்க் குளத்திலும், கால்வாயிலும், ஆற்றிலுமாகத் தமது நாயகர், அல்லது நாயகர் பந்துக்களைப்பற்றித் தமது சிநேகிதைகளிடத்திற் குறை கூறுகின்றார்களே; இது நல்லதா? "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" அன்றோ?

***

பெண்டிர் சிலர், தங்கள் நாயகரால், வீட்டுச் செலவின்பொருட்டு உதவப்படும் பண்டங்களை அவர்க்குத் தெரியாமலே விற்றுப் பொருளீட்டுகின்றார்களே! இது என்ன பிழைப்பு? "விற்ற, வீடு வெறுவீடு" என்பதை இவர்கள் அறியார்கள் போலும்!!

***

ஒருவன், பொருளை வைத்துக்கொண்டு, 'இதனை ஆளப் பிள்ளை இல்லையே' என்று கவல்கின்றான். பொருட்குப் பிள்ளையா, பிள்ளைக்குப் பொருளா?

***

ஒருவன், "இன்னான் பிள்ளை இவன்' என்று பேர் சொல்லத்தானே பிள்ளைவேண்டும்?; பிள்ளை எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் என்ன?" என்கின்றான். இவன் பேர் பிள்ளையின்றி நிலைபெறாது போலும்!!

***

ஒருவன், "குடமுடைத்துக் கொள்ளிவைக்கத்தானே பிள்ளைவேண்டும்." என்கின்றான். அப்பிள்ளையும், தன் தகப்பன் உயிரோடிருக்கும் போதே அப்படிச்செய்துவிடுகின்றான். இப்படிப்பட்ட அருமைப்பிள்ளையிடத்தில், பிதாவுக்கு விசேஷப்பிரியம் இருக்கும் அல்லவா?

***

"எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன விச்சைமற் றல்ல பிற" என்றபின்னும், தம்மக்கட்குக் கல்விகற்பிக்காமற் பொருள் சேர்த்து வைப்பார் பலர்.

***

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றபின்னும், கற்றற்கட் பொருட்செலவிற்கஞ்சிப் பின்வாங்கும் செல்வர்களும் உளர்; இயன்ற அளவிற்றானுங் கல்விகற்றுக் கொள்ளாதவறிஞர்களும் உளர்!!

***

"தொடங்கிய வாழ்க்கையை வாளா துறப்பர் துறந்தவரோ, யடங்கிய வேட்கை யரன்பா விலாஅ காற்பறவை, முடங்கிய செஞ்சடை முக்கணனார்க்கன்றி யிங்குமன்றிக், கிடங்கினுட் பட்ட கராவனை யார்பல கேவலரோ."

***

கீழ் நின்று கீழ் வீழ்வாற்கும், குன்றேறிக் கீழ்வீழ்வாற்கும் பேதமில்லையா?

***

இக்காலத்தே, புவியின்மேல் போர்த்துப், பல கழுதைகள் பயிரை மேய்கின்றன; சிற்சில இடங்களில் பூசையும் பெறுகின்றன; ஆகலின், உழவன் அடிக்கடி கண்காணித்துவரக்கடவன்.

***

தவவேடரும் அவவேடரும் தாமிற் சமானர் ஆதல் எப்படி? இருவரையும் சமமாக வைத்து உபசரித்தல் நல்லதா?

***

"மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம், பழித்ததொழித்துவிடின."

***

துறவிகளும், இடம் பொருளேவலாற், றமது நிலைகுலைந் தெழிகின்றனர். இடம் பொருளேவல் மிகப் பொல்லாதனபோலும்! தாயுமானவர், "இடம் பொருளேவலைக்குறித்து, மடம்புகு நாய் எனவே, எங்கே நீ அப்பட்டாய், இங்கே நீ வாடா." என்று கூவுகின்றனர்.

***

அறிவுநூல், சில துறவிகட்குப், பிழைப்பைத் தருகின்றது.

***

"கூலித் தொழிலாளர், கொண்டு விற்போர் போன்ற குருவேலைப் பகடிகள்" பலர்.

***

அரசிறைபோலக், குடியிறை கொள்ளுங் குருக்கண்மாரும் உளர்; அதன் பெயர் 'காணிக்கை' யாம்.

***

சிவபூசையைப் பாட்டத்துக்கடைப்பவர் எத்தனைபேர்!

இதோபதேசி.

உண்மை விளக்கம்.

இவ்வுலகின்கண் உண்மையைக் கண்டுணர்தலும், உணர்ந்தவற்றைத் தெளிவுபடப் போதித்தலும் கஷ்டம். உண்மையைக் காண்பவர் செல்வம் கீர்த்தி முதலியவற்றைப் பெறுவது கருதாமல் உண்மைகுறித்தே உழைத்து ஆராய்தல்வேண்டும். அவ்வுண்மையைப் போதிக்கப் பெறுபவருடைய பக்குவத்தையுந் தெளிந்துகொள்ளல் வேண்டும். திருஷ்டாந்தமாக, நீராவியந்திரத்தின் சக்தியை எடுத்துக்கொள்வோம். நீராவியின் சக்தியால் வண்டிகளும் கப்பல்களும் பின்னும் சில யந்திரங்களும் ஓட்டப்படுகின்றன. நீராவியின் சக்தியால் நடைபெறுகிற விசித்திரத்தை அறியாத மாந்தர் பலர், மந்திரசக்தி, பிசாசின் சக்தி, போகர் என்னும் யோகியின் மகிமைமுதலியவற்றால் அக்காரியங்கள் நடைபெறுவதாக நம்புகிறார்கள். அவர்கள் மெய்யாகவே நம்புகின்றனர். அவர்களுக்கு இந்த அவசரத்தில் நீராவியின் சக்தியை எவ்வளவிற்கு எடுத்துக்கூறினபோதிலும் எள்ளளவும் அவர்கள் புத்தியிற் பதிகிறதில்லை. அவரவர் கொண்ட கொள்கைகளை அவரவர் விவேகத்திற்குப் பொருத்தமாக உண்மையென்றே சாதிக்கின்றனர். ஆதலால் ஒருவருடைய விவேகத்திறமையைக் கொண்டு மற்றவரது விவேகத்தைப் பக்குவப் படுத்தாமற் போதிப்பது பயனற்றதாக முடியும். இதுபற்றி நம் ஹிந்துமதத்தில் ஓர் உண்மையைப் போதிக்க விரும்பினால் அதனைப் பற்பல ரூபமாகக் காட்டி அவரவர் பக்குவம்போல உணர்த்தி கடைசியில் உண்மையை உள்ளபடி உணரும் வண்ணம் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். ஆகையால் ஒரு நிலையில் இருக்கின்றவர் தமது கருத்தை ஒரே விதமாகத் தமக்கு வேறுபட்ட நிலையில்

இருப்பவருக்கு நேரில் போதிப்பது கூடாது. கேட்பவரது பக்குவத்தை உணர்ந்துகொண்டு அதற்குத் தக்கபடி உணர்த்தல்வேண்டும். இதுபற்றிச் சில தத்துவ உண்மைகளை உருவகமாகிய கதாரூபமாக வெளிப்படுத்தி யிருக்கின்றார் சிலர். அக்கதைகள் குற்றமுடையனவாகக் காணலாம். ஆனால் அவற்றிற்கு உள்ளீடான தத்துவப்பொருள் நியாயமாயிருக்கக்கூடும். நமது வான சாஸ்திரத்திலுள்ள பல உண்மைகளைக் கதாரூபமாக உருவகப்படுத்தி யிருக்கிறார்கள். குரு பத்தினிக்கும் சந்திரனுக்குமுள்ள தொடர்பும், சந்திரனுக்கும் உரோகணிக்குமுள்ள நட்பும், சாயாகிரகங்களாகிய இராகு கேதுக்களைச் சர்ப்பங்களாக பாவித்தலும் இதுபோலொத்தவைகளும் உள்ளீடான வேறு கருத்துக் கொண்டவைகளாகவே யிருத்தல்வேண்டும். கிரகங்களுடைய போக்குவரவின் கருத்துகளை இவ்வாறு உருவகப்படுத்தி யிருக்கிற உண்மைகளைப் பெரியோர்களிடம் கேட்டுத் தெளிதல் வேண்டும். தெளிந்த பின்னர் அவ்வுண்மைகளைப் பிறர்க்குப் போதித்தல் வேண்டும். எந்த விஷயங்களிலாவது நமக்குச் சந்தேகம் ஜெனிக்கும் விஷயத்தில் முற்பழக்கத்தால் அவ்விஷயங்களிலுள்ள நம் நம்பிக்கையை நழுவவிடலாகாது. ஐயமறத் தெளிந்தபின்னரோ உண்மை விளக்கத்திற் கேற்ப நம்பிக்கையை மாற்றிக்கொள்ளல் வேண்டும். ஏனெனில் உலகத்தில் நமது புல்லறிவிற்கு எட்டாத பலவிஷயங்கள் காணப்படுகின்றன. நாம் இளமையில் அறியுமுன்னர்த் தப்பிதமென்று கொண்ட பல கொள்கைகள் பிற்காலத்தில் சரியானவைகளாகக் காணப்படுகின்றன. விவேகமானது காலத்திற்குக்காலம் மாறுபடுகின்றது. விவேகத்தின் நிலைமை ஒரு மனிதனிடத்திலேயே மாறுபடுகிறது மட்டுமன்று, பற்பல மனிதர்களிடத்தும் பற்பல பக்குவத்தை உடையதாகக் காண்கிறோம், இவற்றையெல்லாம் ஆராயுங்கால் உண்மையை அறிவதிலும் பிறர்க்கு விளக்குவதிலும் விசேட சாமர்த்தியம் வேண்டுவதாகின்றது.

(தொடரும்) இலக்குமணப்போற்றி.

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு

திருச்சிற்றம்பலம்.

“புலனொ டாடித் திரிமனத்தவர் பொறிசெய் கா
மத் துரிச டக்கிய—புனித நேசத் தொடுத மக்கையர் பு
ணர்வி னூற் றுறைசெ யக்குடர், சூலவு சூலைப் பிணி
கெடுத்தொளிர் சுடுவெ ணீறிட் டமண கற்றிய—துணிவி
னொன்றுப் புரமெ ரித்தவர் சுழலி லேபட் டிடுத வத்தின,
ருலகின் மாயப் பிறவி யைத்தரு முணர்வி லாவப் பெரும
யக்கினை—யொழிய வாய்மைக் கவிதை யிற்பல வுபரி பா
கப் பொருள்பரப்பிய, வலகின் ஞானக் கடலி டைப்படு
மமிர்த யோகச் சிவவொ ளிப்புக— வடிய மேமுக் கருளி
னைச்செயு மனாய தேவத் திருவ டிக்களே.”

திருச்சிற்றம்பலம்.

நமது பத்திரிகை, இத்துடன் தன் மூன்றாவது ஆண்டு தொடங்கப்பெற்றிருக்கின்றது. இதுவரையும் தமிழுலகிற் கிதுசெய்த உபகாரம் இதுவாமென யாமொன்றும் கூறேம். அங்ஙனமொன்றுளதாயின் அது, திருவருளானும், அத்திருவருளாற் றூண்டப்பெற்று, இப்பத்திரிகைக்குப் பலவாற்றானும் உதவி புரிந்தோரானும் ஆயதொன்றே எனத் துணிந்து கூறுவேம், அவரை வாழ்கென்றுள்ளங் குளிர வழுத்தி வாழ்வதல்லது அவர்பொருட்டும் எம்மாற் செய்யக்கிடந்ததோர் கைம்மாறொன்றுமின்றாம்! இது நிற்க.

ஒருவன் நீட்டித்து வாழ்தலான் அவன் தனக்கும் உலகிற்கும் பயன்படும் என்பதூஉம், அங்ஙனம் வாழாமையாற் படான் என்பதூஉம் அன்று. மற்றென்னையோவெனின், அவன் தனக்கும் உலகிற்கும் பயன்படுமாயின் ஓரிமைப்பொழுதினும் பயன்படும்; படானெனிற் றேவயாண்டுறினும் பயன்படாதொழியும். எய்தும் பயனும், மற்றதன் றகுதியுநோக்கி, அஃதெய்துதற்கேதுவாய் நின்ற இமைப்பொழுதும் கற்பகாலமாம்; கற்பகாலமும், அதன் பயனின்மையும் தகுதியின்மையும் நோக்கிச், சொற்பகாலமாம், ஆம் என்பதென்னை? உண்மையும் அதுவே.

எனவே, நமது திருநாவுக்கரசு நெடுநாள் நின்று நிலவியும் பயன்படாதொழியின், அங்ஙனம் நெடுநாள் நின்றமை அதற்கோர் புகழாகாது; சின்னாள் நிற்பினும் அது மிகப் பயன்படுவதொன்றாயின், அங்ஙனம் சின்னாள் நின்றமை அதற்கிகழ்ச்சியாகாது; ஆகலிற், சின்னாள் நிற்பினும், பன்னாணிற்பினும், அந்நாளனைத்தும் நன்கு பயன்படும் நன்னாளாதலைக் காணும் அல்லது கேட்கும் வேட்கை பெரிதும் உடையேம்.

இஃதெமது கருத்தாகலின் அக்கருத்திற்கிணங்க உதவும் மதுகையுடைய பெரியாரனைவரும் திருவருள்சுரந் தினிதுதவுகவென் றவரைப் பன்முறையும்வேண்டிப், பணிந், தவராசீர்வதிக்கப்பெற், றெம்மா லியன்றதொன்றை, இயலுமளவில், அமயந்தோறும் இயற்றற், கிவ்வாண்டினும், திருவருளைச் சிந்தித் தொருப்படுகின்றேம்.

ஓராண்டு சென்றுமற் றோராண்டு வந்தபின் னென்
றறலு, மீராண்டு போந்தவென் றெண்ணிக் கொளுமி
தெ னென்றென்றுமே, நாராண்ட சொற்றிரு நாவுக்க
ரசை நலம்பயப்பப், பாராண்டு கொள்கெனப் பல்லாண்டு
கூறிப் பரவுதுமே.

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீ ராமாயணக் கதைகள்.

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறுவோர்க்கே."

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியாவென்று பெயர். பூர்வகாலத்தில் இந்த தேசத்தை சிறிதும் பெரிதுமாக 56 பாகங்களாகப் பிரித்து அவைகளில் 56 ராஜாக்கள் அரசாண்டார்கள். இந்த ஐம்பத்தாறு அரசர்களுக்கு மேலாக ஒருஅரசர் அதிக அதிகாரத்தோடும் சாமர்த்தியத்தோடும் அரசாண்டுவந்தார். அவர் இந்த ஐம்பத்தாறு அரசர்களில் ஒருவர். அவருக்குச் சக்கிரவர்த்தி என்று பெயர்.

நம்முடைய தேசமாகிய இந்தியாவின் வடபாகத்தில் அயோத்தியா ராச்சியமென்று ஒரு இராச்சியமிருந்தது. அதின் அரசர்கள் சக்கிரவர்த்திகளா யரசாண்டு வந்தவர்கள். அதில் இக்ஷுவாகு என்பவர் முதல் சக்கிரவர்த்தி. அவர் வம்சத்தார் எல்லாரும் சக்கிரவர்த்திகளாக அரசாண்டு வந்தார்கள். இவர்களில் தசரத சக்கிரவர்த்தி என்பவர் ஒருவர். இவர் அதிக வல்லமையுள்ளவர். பொய் சொல்லாதவர். குடிகளுக்கு நல்ல காரியங்களைச் செய்பவர். இவர் ஸகலவிதமான நல்ல குணங்களையுடையவர்.

அயல் ராச்சியங்களின் அரசர்களின் புத்திரிகளாகிய கோஸலை, கைகேயி, ஸுமித்திரை என்ற மூன்று ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொண்டு ஸுகமாய் வாழ்ந்து வந்தார். அந்த நாளில் அவருக்குக் குழந்தைகளில்லை. குழந்தைகளில்லையே என்று அவருக்கு அதிக விசனமுண்டு. இந்தக் குறைவை நீக்கிக்கொள்ள வேண்டுமே, என்ன செய்கிறதென்று யோசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் இவருடைய சபைக்கு இவருடைய குலகுருவாகிய வசிஷ்டர் வந்தார். இவர் ஒரு பெரிய ரிஷி. வேதங்களை நன்கு யறிந்தவர். அதிக சக்தியுடையவர். இவரிடத்தில் தசரத மஹாராஜா பின்வருகிறபடி கேட்டார்.

"ஸ்வாமி, நான் வெகுநாளாய் அரசாண்டுவருகிறேனே, என்னால் கூடியவரை பாபம் ஒன்றும் செய்யாமலும் குடிகளுக்கு கெடுதி செய்யாமலும் பொய்சொல்லாமலும் நடந்து வருகிறேனே, எனக்குப்பின் அரசாளுவதற்கு எனக்கு ஆண் குழந்தைகளில்லையே என் செய்வேன்? இந்தக் குறையை நீக்க வகையுண்டா" என்று கேட்டார். தனக்குக் குழந்தைகளில்லாமலிருப்பதைப் பற்றி அதிக விசனப்பட்டார். இதைக்கேட்டு வசிஷ்ட ரிஷி, "தசரத மஹாராஜனே, விசனப்படாதேயும், உம்முடைய விசனத்தை நீக்க நான் ஒருவகை சொல்கிறேன். அந்தப்படி செய்யும். உம்முடைய குறை நீங்கும். உமக்கு ஆண் குழந்தைகள் பிறக்கும்" என்று சொன்னார். அதற்கு தசரதர்— "ஸ்வாமி, தேவரீர் உத்தரவு செய்கிறபடி நடக்கத் தயாராயிருக்கிறேன். தயவுசெய்து சொல்ல வேண்டும்" என்று வெகு ஆவலாய்க் கேட்டார். உடனே வசிஷ்டர்- "தசரதரே, கேளும்; ஞானவான்களாகவும், தீமை நினைப்பதென்பதும் தெரியாத பரிசுத்தமான மனதையுமுடைய ரிஷிகளைக்கொண்டு 'ஒரு யாகம் செய்விக்க வேண்டியது.' 'புத்திரகாமேஷ்டியாகம்' என்ற யாகத்தைச் செய்விக்க வேண்டியது. கலைக்கோட்டு மஹரிஷி யென்றவரை முக்கியமானவராக வைத்துக்கொண்டு இந்த யாகத்தை நடத்தும். இந்த ரிஷி உரோமபாதர் என்ற அரசரிடம் இருக்கிறார்; அவ்விடத்தி லிருந்து வரவழைத்துக் கொள்ளும்" என்று சொல்லிவிட்டுத் தன் இருப்பிடத்திற்கு வசிஷ்டர் போய்விட்டார்.

தசரத மஹாராஜா இந்த ரிஷியைத் தன்தேசத்திற்கு வரவழைத்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடு செய்தார். யாகம் நடத்துவதற்காக வேண்டிய இடத்தையும், சாமான்களையும் தயார் செய்யும்படி உத்தரவு செய்தார். [illegible] நடக்கிற இடத்தையும், தினத்தையும் குறிப்பிட்டு எல்லா தேசத்து ராஜாக்களுக்கும் அநேக இடங்களில் தபஸ் செய்கிறவர்களான ரிஷிகளுக்கும் வேதமறிந்த பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் அழைப்புக்கடிதங்களனுப்பி, அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

(இன்னும் வரும்.)

சே. இராமஸ்வாமி ஐயங்கார் B. A. L. T.

உ

மெய்கண்டசிவமயம்.

(முன்தொடர்ச்சி)

முன்னாளில் ததீசியென்னும் ஆதிசைவரொருவர் சிவபக்தியும் சிவார்ச்சனையும் நியாயப்படி நீங்காத சித்தமுடையவராய் சிவாகமங்களை ஐந்திரிபறக் கற்றுணர்ந்து நித்திய நைமித்திக பிராயச்சித்தங்களைச் செய்துவருவாராயினர். இவருக்கு புத்திரரொருவருளர். அப்புத்திரர் தமது மரபுக்கேற்ப தந்தையால் தீக்கை செய்யப்பெற்று சிவாகமங்களை ஓதியுணர்ந்து காலந்தவறாமல் சிவபூசை செய்துவந்து தக்கபருவத்தில் மணஞ்செய்யப்பெற்று அம்மனைவி துர்க்கிருத்தியங்களால் மதிமயங்கினவராய் நான்கு புதல்வர்களைப்பெற்றார். அவளிடம் சுவாதீனமனமுடையவராய் வைகினரேனும் சிவபக்தி மாத்திரம் சிறிதும் குறையாது தன் தந்தைபோலவே சிவார்ச்சனை செய்தும் பிறர்க்கு சிவதீக்கை செய்துகொண்டும் வந்தனர். அந்நாளி லொருநாள் தன் தந்தையாகிய ததீசி தன் ஞாதிகள் விஷயமா யயலூருக்குச் செல்லவேண்டி தன் புத்திரனைப்பார்த்து குழந்தாய் நான் ஊருக்குப்போக நேர்ந்தமையின் நான் வருங்காறும் வழக்கம்போல சிவலிங்கார்ச்சனை செய்துவருக வெனக்கூறிப்போந்து உறவினர் விருப்பின்படி சிறிதுகால மங்கே வைகினர். புத்திரரும் காலந்தவறாது சிவபூஜை செய்துவந்தனர். அந்நாளில் சிவராத்திரிதினம் சம்பவிக்க ஊரிலுள்ளார் யாவரும் விரதமனுட்டித்து சிவபூசை செய்யவேண்டிய காலமாகவில் அப்புத்திரரும் உபவாசமுடையராய் அந்நாளிரவில் காலந்தோறும் பூசித்துவருகையில் மூன்றும் கால பூசை முடிந்தபின் தெய்வகதியாலும் தன் பாரியின் துர்க்கிருத்தியத்தாலும் மனந்தவறி சமீபித்த நான்காம் கால பூசையையும் செய்ய சிவபிரான் சினங்கொண்டு அவரை உன்ம

த்தராகச் செய்தனர். அந்நாள் தொட்டு அவ்வுன்மத்தருடைய புதல்வர் நால்வரின் சேஷ்ட புத்திரர் அச்சிவலிங்கார்ச்சனையை கடைப்பிடித்துச் செய்துவந்தனர். சிறிது காலங்கழிந்து ததீசி தன்னூரெய்தி தன் புத்திரன் உன்மத்தனாயிருப்பக் கண்டு மனத்துயருற்று நியமித்தவாறு சிவபூசை செய்கையில் பெருமான் பிரத்தியக்ஷராய்த் ததீசியை நோக்கி இவ்வகைப் புத்திரனைக்கொண்டு என்னைப் பூசிக்கச் செய்தனையன்றோ வென்று கண்டிக்க, ததீசி மிகவும் பயந்து, அந்தோ இவ்வாறு செய்வானோ ஆ! ஆ! இவனால் என்வம்மிசம் பெருமையற்றதே. இனி யாது செய்வேன். இதற்குப் பிராயச்சித்தமுளதோ வென்னத் தம்மைத்[illegible]மே யிகழ்ந்துகொண்டனர். இந்நாளில் அவர் புத்[illegible] பயித்தியராகச் செய்த துஷ்டை யிறந்தனள். அவள் சிவபூஜாவிக்கினம் செய்தவளாயினும் ததீசியும் மனம் தளர்ந்து வருந்தி தன்புத்திரன் பாவம் பரிகரிக்கப்பட வேண்டுமென்னு மாசையால் பிராயச்சித்த விதிப்படி தன் புத்திரன்பொருட்டு சிவபூசையும் தேவபூசையும் செய்துவர, பார்வதி இரங்கி ததீசியை நோக்கி ஆதிசைவர் எமது புத்திரராகலின் நீயஞ்சவேண்டாமெனத்தேற்றி சிவபிரானிடம் அவன் பாவத்தை மன்னிக்கவேண்டுமெனக்கூறி நெய்யால் ஸ்நானம் செய்வித்து சிவபிரானால் எஞ்ஞோபவீதம் தரிப்பித்து சோடசாட்சர சொரூபமாகிய சிவகாயத்திரியையும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தையும் உபதேசஞ்செய்வித்து ௰௬-முறை ஜெபிக்கச்செய்தனர். அதனால் அவர்பாவம் பரிகரிக்கப்பட்டது. சிவபிரானவ்வாதிசைவர் புத்திரரைநோக்கி இனி இம்மந்திரங்களைக்கொண்டே பாத்தியமுதல் நமஸ்காரபரியந்த மடங்கிய பூசையை செய்யவேண்டுமென் றோதி இனி அநேக சிவமந்திரங்களையும் உபதேசித்தனர். தானியம் பலம் வஸ்திரம் நெய் எண்ணெய் முதலிய சிவபூசைசெய்த மீதியை யெல்லாம் நீவிர்அனுபவித்தால் உங்களுக்குத் தோஷமில்லை, யெனக்கு நெய்வேதித்தவை முதலியன வெமது முகத்தில் தோன்றின ஆதிசைவரான நீங்களே நுகர்தற் குரியரன்றி பிறர் அதனைப் பெறுதற்குப் பாத்திரராகமாட்டார். நீங்களே யெம்மையும் பார்வதிதேவியையும் பிறரையும் பூசித்தற்குரியவர். ஏனையரெல்லாம் ஆன்மார்த்தலிங்கங்களை மாத்திரம் பூசிக்கலாமேயன்றி பரார்த்தலிங்கங்களை ஆதிசைவர்களைக் கொண்டே பூசித்தல்வேண்டும்,

ஏனைய ரொவ்வொருவரும் இஷ்டலிங்கத்தை பூசித்து இகபரபோகங்களை அனுபவிக்கக் கடவரென் றோதி ஆசாரியாபிஷேகஞ் செய்து பழைய படியே சிவபூசா உரிமையைக்கொடுத்து நீங்கள் வேத மந்திரங்களிலும் சிறந்ததாய ஆகமமுறையாகவே பூசை செய்யவேண்டும். நீங்கள் எவன் பக்ஷமாய் வைகுவீர், அவனுக்கு வெற்றி [illegible]ண்டாகக்கடவது. உம்மைப் பூசித்தவர் எம்மைப் பூசித்த[illegible]ய்தவர். சைவாசாரங்களையும் சிவபக்தியையும் [illegible]யவேண்டிய ஆதிசைவராகிய நீங்கள் உலகத்[illegible]ப்போலவே மதிக்கப்பட்டு குடும்பவிர்த்தி [illegible]வீரென வரமளித்து ஆசீர்வதித்தனர். [illegible]ர் ஆசாரமுடையராயினும் ஒருபோது [illegible]ந்தவறினவராயினும் அவ்வரை உலக[illegible]. சிவபெருமானையும் பார்வதிதேவியையும் கையால் பரிசித்து பூசிக்கும் பேறுடைய ஒரு ஆதிசைவனுக்கு அன்னமளித்தவர் அநேக கோதானப்பலனைப் பெறுவர். முனிவர்களே, ஆதிசைவர்கள் சிவகடாக்ஷம் பெற்றவராதலின் அவர் தங்களுக்காகவும் பிறர்க்காகவும் சிவபூசைசெய்ய உரியர். ஆகலின் நீங்கள் கேட்டவாறே ஆதிசைவர் மகிமையை கூறி[illegible] அவர்களைக்கொண்டு சிவலிங்கங்களை பூசித்தவர் பெறும் பேற்றை யென்னால் சொல்லமுடியாதென சூதமுனிவர் கூ[illegible]. இது சைவபுராணத்துள் ஞான சங்கிதையுட் கூறப்பட்டது.

“நிறுத்திடவ லானமல னானெறியை யென்று
மறுத்திடவ லானவல மார்க்கமய லுற்றே
நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரிச னேச
மறுத்தவனை மாய்க்கை கரிசல்ல வறமாமே.”

எற்போராய வேதியரும் ஈவோராய செட்டிகளும் பிறருமாய தாமிருவரும் மீளா நரகெய்தற் கேதுவாய்ச் செய்துகொண்ட போலிச்சத்திர முதலிய போலியறங்களை மறுக்கு முகத்தான் ஆதுலர்க்கன்னசாலைய தியல்பிதுவென அதனை வலியுறுத்தற்பொருட் டுரைத்ததாய ஈகை முதற்பாட்டு விருத்தியுள் இவ்வாதிசைவ வேதியரே பாத்திரங்களுள் வைத்து சற்பாத்திர ரென்பதூஉம், ஏனைவேதியர் அசற்பாத்திர ரென்பதூஉம் பிறவும் பெரிதும் விரித்துரைத்தாம். ஆண்டுக்காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும். அற்றேல், ஆதிசைவவேதியர் அறிவொழுக்கம் வழீஇயினாரேனும் அவரைக்கைவிடற்க வென்றது ஏனைவேதியர்க்கு மொக்குமென்றாற்படு மிழுக்கென்னையெனின், அவர்க்கு அதுவுந் தகாதென்பதும் பிறவும் ஆண்டேயுரைக்கப்பட்டன.

சிதம்பரப்பரதேசி, திருமான் சிவஞான
மெய்கண்டதேசிக ருரைமுகத்துக்கேட்கு
மாணாக்கன், செப்பறைவாசி இலங்கைத்தேசி.

திருநெல்வேலிஜில்லா சிவதேவஸ்தானங் கமிட்டியாரவர்கள் தமது ஆளுகையிலுள்ள சிவாலய பூசாகைங்கரியத்திற்குரிய ஆதிசைவர்களுக்கு சிவாகம பாடசாலையொன்று கஸ்பாவில் ஸ்தாபித்து அதில் தக்கபண்டிதர்களை நியமித்து அவர்களால் ஆலய பூசாகைங்கரியங்களுக்குவேண்டிய விஷயங்களைத் தெளிவாய்க் கற்பித்து அதில் கற்பவர்களை பரீக்ஷைசெய்து பரீக்ஷையில் தேர்ந்தவர்களைக்கொண்டு பூசாகைங்கரியங்களை நடத்திவர உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த உத்தேசம் உற்பத்தியாய்ப் பலவருடங்களாயும் பயன் பெறாது காலங்கழிந்து வருகின்றது. சிலமாசங்களுக்கு முன் கமிட்டி ஆபீசு இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் இந்த ஜில்லாவிலுள்ள ஆதிசைவர்களின் தொகையையும் அவற்றுள் சிவாகமபாடசாலையிற் கற்றுத்தேறுதற்குரிய பருவமும் விருப்பமும் உடையவர்களின் தொகையையும் தெரிந்து இரண்டுவாரத்துக்குள் ரிப்போர்ட்டு செய்யும் உத்தரவனுப்பினார்கள். அதற்கு இன்ஸ்பெக்

டர்களின் பிரவர்த்தி மிகுதியால் நாளது வரையும் ரிப்போர்ட்டு வருதற் கிடமின்றி காலதாமிதப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதனால் இப்பொழுது ஒவ்வொரு தேவஸ்தானம் தர்மகர்த்தர்களும் தமது ஆஞைவிலிருந்து அர்ச்சர்களி[illegible]ரத்தை கமிட்டியாபீசிலிருந்து, அனுப்புகிற பாரத்தில் பூர்த்தி[illegible]வேண்டுமென்று கமிட்டிமெம்பர்களில் ஒருவராகிய மக-ள-ள-ஸ்ரீ A. V. திருமலையப்பபிள்ளையவர்கள் நிர்மானஞ்செய்து ஆபீசு செ[illegible] உத்தரவு செய்திருக்கிறார்கள்.

செகரட்டேரியவர்கள் இவ்விஷயத்தை எவ்வளவுகாலத்தில் பூர்த்திசெய்து வைப்பார்களோ வறியேம். இது சுமார் 20 வருடகாலமாய் கமிட்டிமெம்பர்களுள்ளும் பிறவிவேகிகளுள்ளும் பலர் கருதிய அரியவிஷயம். இது பகீரதப்பிரயத்தனத்தை யொத்திருக்கின்றது. காலதாமதப்பட்டாலும், விஷயம் உறுதியாயும் அனுகூலமாயும் அமையுமென்று யூகிக்கவேண்டி யிருக்கிறது. சுபம்.

***

1. ஓர் ஐய வினா:— சைவசமயிகள் தமது கிரியா குருவினிடம் சமயம், விசேடம் என்னும் சிவதீக்ஷை பெறாது தம்மைச் சைவசமயிகளென்று சொல்லும் உரிமை பெறுவரா?;

2. உடையவர் பூசை யுள்ளார் தமது பூசைச் சாமியையும் மற்றும் பூசாருகமான சாமான்களையும் திருடர்கள் திருடிக்கொள்ளின் அவர்கள், பூசைக்கு யாது செய்தல் வேண்டும்?;

3. முற்கூறிய முறையில் திருடினவர்களிடமிருந்து வாங்கிய பூசைச்சாமியை பூசித்துவரலாமா?

***

1081-ம் ஞு தைமீ 27-உ யன்று பாண்டிநாட்டில் பெரும் சிறப்புடன் விளங்கும் திருப்புடை மருதூரில் நடந்த தைப்பூச புண்ணிய காலத்திலும் முன்பின்னுள்ள தினங்களிலும் மக-ள-ள-ஸ்ரீ சைவப்பிரசாரகர் தி. கா. சங்கரமூர்த்தி முதலியாரவர்கள் புண்ணியகாலம், ஸ்தலம், தீர்த்தம் மூர்த்தி என்பவைகளைப் பற்றியும் சைவ நன்மக்கட் கனிகலமாயுள்ள சிவாலயதரிசன மான்மியங்களையும் பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள்.

அத்துடன் "கடவுள் வணக்கத்துக்கு விக்கிரஹம் அவசியம்" என்னும் பத்திரிகையும் பலருக்கும் பகிம்படி கொடுத்தார்கள்.

கிறிஸ்தவ சமயிகள் பலவாறாய் நின்று நமது சமயிகளை தம்மதத்திற்கு இரையாக்கும் இக்காலத்து சில தேவஸ்தானங் கமிட்டியாரவர்கள் இவ்வித சைவ சமய உண்மையை யாவருக்கும் எளிதில் விளங்கும்படி பிரசங்கம் செய்வித்தல் பேருபகாரமென்றே நினைத்த லவசியமாம். சுபம்.

ஓர் சிவபத்தன்.

பெண்களின் உரிமை.

உலகத்துள் காணப்படுகின்ற சிவர்களுள் ஆண்மக்களுக்கோர் சுதந்தரம் ஏற்பட்டிருக்கப் பெண்மக்களுக்கு அவ்வாறு ஏற்படாமைக்குக் காரணம என்ன? ஆண்பெண்ணாகிய இருவகைச் சரீரக்கூறுபாட்டின் வன்மையும் மென்மையும் நோக்கி அவ்வத் தகுதிக்கேற்பச் செய்யவேண்டிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்ட அளவில் ஆண்மக்களுக்கு, பெண்மக்களுக்கல்லாத விசேஷ சுதந்தரம் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணலாம். உடற்பு சம்பந்தப்பட்ட அளவோடு நில்லாது உயிர் ஆன்மா இவைகள் சம்பந்தப்பட்ட அளவில் ஆண் பெண் என்று பாகுபடுத்து, உயிர்க்குறுதிசெய்வதாக எண்ணப்படுகின்ற கல்வியும் அறம், பொருள், இன்பம் வீடு என்ற நால்வகைப் புருஷார்த்தங்களும் ஆண்மக்களுக்கே உரிமையென் றெண்ணப்படவும், பெண்மக்களுக்கு அவ்வாறு எண்ணப்படாமைக்குக் காரணம் யாதாகுமோ?

ஆண்மகனுக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் உண்டோ அதேசம்பந்தம் பெண்மகளுக்கும் கடவுளுக்கும் இல்லையென்று யோசிக்கத் தொடங்கிய தென்னையோ? அம்மட்டோடும் அமையாது ஆண்மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை ஆண்மக்கள் பெண்மக்களுக்குவற்படுத்தி, ஆண்மக்கள் தம்மையே கடவுளாகவும், தமக்குத்துணை நின்றுதவும் பெண்மக்கள் தங்களுக்குமாத்திரமே திருப்திசெய்யவேண்டிய அடிமைகளாகவும் நினைத்து, பெண்மக்களுக்குத் தங்கள் நாயகனைத்தவிர வேறுகடவுள் இல்லையாதலினால் கடவுள் வழிபாடு பாவம் எனவும் கற்பிக்கத்தொடங்குதல் அறிவோ?

புருஷ சரீரத்தை இலக்கணமாக்கொண்ட ஆன்மா வீடுபேற்றின் பொருட்டு கடவுளைநோக்கிச் செய்யநினைக்கின்ற செயல் எல்லாம இல்லாமலே, பெண் சரீரத்தை இலக்களமாக்கொண்ட ஆன்மா புருஷ சரீரத்தை மாத்திரம் திருப்திசெய்வதனால் வீடுபேறு எய்திவிடும் என்று எண்ணுவது சரிதானோ? சரீர வித்தியாசம்தவிர ஆன்மாவிலும் பெண்என்றும் ஆண்என்றும் வித்தியாசம் கற்பிப்பது சாஸ்திர சம்மதந்தானோ? எல்லா ஆன்மாவுக்கும் வீடுபேற்றிற்கு ஒரேநெறியாய் இருத்தல் வேண்டாவோ? இதனைப்பெரியோர்கள் ஆராய்தல்வேண்டும்,

காந்திமதி.

அறிவிப்பு.

நமது பத்திரிகையின் சந்தாதாராகவிருந்து, சென்ற வருடத்திற் பத்திரிகைபெற்றுவந்த வர்களுக்கு இவ்வருஷமும நமது பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது, பத்திரிகைபெற விருப்பமில்லாதவர்கள் அவர்கள் கருத்தைத்தெரிவிக்க வேண்டுகின்றோம்; விருப்ப முள்ளவர்கள் அவரவர்கள் சந்தாத்தொகையை அடுத்த மார்ச்சுமீ த்து[illegible]க்குள் ளனுப்ப வேண்டுகின்றோம்: பணம் அனுப்பாதவ[illegible]களுக்கு அடுத்த பத்திரிகை வாலியூபேயபில் போஸ்[illegible]னுப்பப்படுமென்பதை அன்புடன் தெரிவித்துச்[illegible]றோம்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி [illegible]
திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. [illegible]
Aryaprakasini Press, Tinn[illegible]

MAHAMAHOPADHYAYA